**<u>THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARANI.</u>**
**<u>S.C.No.58/2014</u>**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.9** |
| **Name** | **:** | **திரு.முருகன்.** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.08.2022.**

**<u>முதல் விசாரணை</u> -**

**நான் வினாயகபுரத்தில் குடியிருக்கிறேன். நான் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர். தற்போது விவசாயம் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். 27.4.2012 அன்று காலை 7 மணிக்கு நான் எழுந்து வரும்போது சரவணன் மகன் கொலை செய்யப்பட்டு தனக்கோட்டி கிணற்றில் இருந்த பிரேதத்தை சரவணன் வீட்டு திண்ணையில் போட்டதாக கேள்விப்பட்டு சென்றபோது சுமார் 9.30, 9.45 மணிக்கு காவல் ஆய்வாளர் மற்றும் உதவி ஆய்வாளர் ஆகியோர் தனக்கோட்டி கிணற்றிடம் விசாரணை செய்துக்கொண்டு இருந்தார்கள். மேற்படி தனக்கோட்டி கிணறானது தண்ணீர் இல்லாத தரை கிணறு ஆகும். அந்த கிணற்றில் ரத்த கறை படிந்த இலை தழைகளையும், ரத்த கறை படியாத இலை தழைகளையும், ரத்த கறை படிந்த கருங்கல்லையும் எடுத்ததற்கு ஸ்டேட்மெண்ட் எழுதினார்கள். அதற்கு என்னிடமும் சக்திவேலிடமும் சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் போட்டேன். சக்திவேலும் போட்டார். அந்த இடத்தை போலிசார் படம் வரைந்தார்கள். படம் வரைந்ததற்கு**

எழுதினார்கள். அதற்கும் கையொப்பம் கேட்டார்கள். போட்டோம். பார்வை மகசர் அ.சா.ஆ.6. தடயம் கைப்பற்றியதற்கு கையொப்பம் கேட்டார்கள். போட்டோம். கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.7. கைப்பற்றப்பட்ட தடயங்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். காய்ந்த இலை சான்று பொருள் 2. ரத்த கறை படிந்த காய்ந்த இலை சான்று பொருள் 3. கருங்கல் சான்று பொருள் 4. போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u> ( எதிரி இன்று நீதிமன்றம் ஆஜராகவில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென எடுத்துரைக்கப்பட்டது.

| |
|---|
| Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.<br>Sd/-.K.Vijaya.<br>Additional Sessions Judge,<br>Arani. |